**சார்பு நீதிமன்றம், உடுமலைப்பேட்டை**

முன்னிலை: திரு.M.சுரேஷ், B.A., B.L., சார்பு நீதிபதி,

2018 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 14 ம் நாள் வியாழக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2049 விளம்பி வருடம் வைகாசி மாதம் 31 ம் நாள்

**மேல்முறையீடு வழக்கு எண்கள் : 1/2018**

உமாராணி ... மேல்முறையீட்டாளர்

/ எதிர் /

P. செல்வராஜ் ...எதிர்மேல்முறையீட்டாளர்

(இம்மேல்முறையீடு உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.419/2009 வழக்கில் 15.11.2017 தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது).

இடையே:-

P. செல்வராஜ் .... வாதி

/ எதிர் /

1. நாச்சம்மாள்(இறப்பு)
2. உமாராணி ... பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு என் முன்னர் 11.06.2018 தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மேல்முறையீட்டாளர் தரப்பில் திரு.P.A.S. சுந்தரம், B.A., B.L., அவர்களும், எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் திரு.P.கோவிந்தராஜு, B.Sc., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும், சாட்சியங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறக்கும்.

**தீர்ப்புரை**

இம்மேல்முறையீடு உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அசல் வழக்கு எண்.419/2009 வழக்கில் 15.11.2017 தேதியில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக மேல்முறையீட்டாளர்/பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பு வழக்குரையின் சாராம்சம்:**

தாவாச் சொத்துக்கள் கிணறும், அதை சுற்றியுள்ள கிணற்றடி பொதுவான இடம் பு.ஏ. 0.20 அடங்கியது ஆகும். தாவா கிணறு ஆதியில் க.ச. 37/ஏ நெ. காலை

என இருந்தது. தற்போது நில உடமை மேம்பாட்டுத்திட்டத்தின்படி 37 /ஏ 1, ஏ 2, என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்கள் ஆதியில் ஒரு ராமலிங்க கவுண்டர் மற்றும் அவரது சகோதரர்களுக்கு பாத்தியப்பட்டதாகும். தாவாச் சொத்துக்களையும், இதர சொத்துக்களையும் ஒரு நாச்சிமுத்துகவுண்டர் 25.02.1974 ந் தேதியில் கிரைய ஆவணம் மூலமாக விலைக்கு வாங்கி அனுபவித்து வந்தார். நாச்சிமுத்துக்கவுண்டர் ஷை சொத்துக்களை தன்னுடைய இரண்டு மக்களான மணி மற்றும் நாயகம் ஆகிய இருவருக்கும் 27.03.1997 ம் தேதியன்று இரண்டு செட்டில்மெண்ட் ஆவணங்களின் மூலமாக பாத்தியப்படுத்திவிட்டார். தாவா கிணற்றை வாதிகளின் முன் உரிமையாளர்களான நாச்சிமுத்துகவுண்டர் அவரது மகன்களான மணி, நாயகம், ஆகியோர் எவ்வித இடையூறுமின்றி அனுபவித்து வந்தார்கள். வாதியின் முன் உரிமையாளர்கள் சிதிலமாகி கிடந்த கிணற்றை மராமத்து செய்து அதை உபயோகப்படுத்தும் நிலைக்கு கொண்டு வந்தார்கள். வாதியின் முன் உரிமையாளர்கள் மணி, நாயகம் ஆகியோர் வேறு ஊரை சேர்ந்தவர்கள். ஷையாரின் தாயார் இருந்தவரை தாவா சொத்துக்களை பராமரிப்பு செய்த வந்தார். அவருக்கு வயதான பின்னிட்டு மூன்றாம் மனிதர்களின் பராமரிப்பில் இருந்து வந்தது. தற்போது தாவாச் சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் வாதி 21.11.2008 ந் தேதியில் கிரைய பத்திரத்தின் மூலமாக விலைக்கு வாங்கி அனுபவித்து வருகிறார். தாவா கிணற்றில் மின் இணைப்போ அல்லது மின்சார மோட்டாரோ போன்ற உபகரணங்கள் எதுவுமில்லை. மேலும் தண்ணீர் இறைக்கம்படி எவ்விதமான அமைப்பும் நிலையில் இல்லை. அதனால், தாவா கிணற்றை வாதியும், வாதியின் முன் உரிமையாளர்களும் தண்ணீர் இறைக்க ஆயில் என்ஜின் மூலமாக தண்ணீர் எடுத்து சில வருடங்களாக பயன்படுத்தி வருகிறார்கள். ஷை தாவா கிணற்றையும் பொது இடத்தையும் வாதியும் அவரது முன் உரிமையாளர்களும் சுவாதீனத்தில் வைத்து அனுபவித்து வருகிறார்கள். அவ்வப்போது தண்ணீர்

பற்றாக்குறை ஏற்படும்போது ஆயில் என்ஜின் மூலமாக தண்ணீர் எடுத்து விவசாயம் செய்கிறார்கள். தற்போது வாதி தாவா கிணற்றுக்கு புதிதாக மின் இணைப்பு பெற நடவடிக்கை எடுத்து வருகிறார். அப்போது பிரதிவாதி தாவா சொத்துக்களான கிணற்றில் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லையெனவும் தாவா கிணறு முழுவதும் அவருக்கு பாத்தியப்பட்டதெனவும் சொல்லி வருகின்றார். மேலும் தாவா கிணற்றை வாதி உபயோகிக் கூடாதென தடுத்தல் செய்ய எத்தணித்து வருகிறார். தாவா கிணறு முழுவதையும் பிரதிவாதி கடந்த சில வருடங்களுக்கு முன் ஒரு பானுமதி மற்றும் மனோன்மணி என்பவர்களிடம் 1999 ம் வருடத்தில் 24.05.1999 ந் தேதியில் விலைக்கு வாங்கிவிட்டதாகவும் அதனால் வாதிக்கு எவ்வித உரிமையும் இல்லையென மறுத்து தகராறு செய்கிறார். பிரதிவாதியின் முன் உரிமையாளர்களான பானுமதி மற்றும் மனோன்மணி அவர்களுக்கு தாவாச் சொத்துக்களுக்கு அருகில் பூமிகள் உள்ளன. அவர்களுக்கு ஷை பூமிகள் 17.0201971 ந் தேதியில் அவர்கள் குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பத்திரப்படி பாத்தியப்பட்டதாகும். ஷை பாக ஆவணத்தில் பிரதிவாதியின் முன் உரிமையாளர்களுக்கு தாவா கிணறு அல்லது அதை சுற்றியுள்ள பொது இடம் ஆகியவை அவர்களது பங்குக்கு ஒதுக்கவில்லை. பிரதிவாதிக்கு தாவா கிணற்றில் எவ்வித உரிமையும் பாத்தியமும் கிடையாது. ஆனால் பிரதிவாதி பல பொய்யான ஆவணங்களை தயார் செய்து தாவா கிணறு தனக்கு பாத்தியப்பட்டது போல் பல்வேறு ஆவணங்களை தயார் செய்துள்ளார். பிரதிவாதியின் மருமகன் அரசு அதிகாரி. அவர் தன்னுடைய அரசு அதிகாரத்தை பயன்படுத்தி பல்வேறு ஆவணங்களை தயார் செய்துள்ளதாக தெரியவருகிறது. பிரதிவாதி தயார் செய்து ஆவணங்கள் அனைத்தும் பொய்யானவை. மோசடியானவை அந்த ஆவணங்களில் வாதியோ, வாதியின் உரிமையாளர்களோ பார்ட்டி அல்ல. வாதியின் உரிமையையும் அவரது அனுபவ பாத்தியத்தையும் தற்போது பிரதிவாதி கடந்த 10 நாட்களாக மறுத்து வருகிறார். தாவா கிணற்றை உபயோகப்படுத்த

கூடாதென தடுதல் செய்ய முயற்சி செய்கிறார். பிரதிவாதி அரசியல் செல்வாக்கும் ஆள்பலமும் உடையவர், பிரதிவாதியின் செய்கையை நீதிமன்ற உத்தரவினால் மட்டுமே தடுக்க முடியும் எனவே, வாதி தாவாச் சொத்துக்களில் தனக்குண்டான உரிமையை நிலைநாட்ட விளம்புதல் பரிகாரம் கோரியும், நிரந்தர தடையுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் இந்த தாவா தாக்கல் செய்துள்ளார்.

**3. பிரதிவாதி தரப்பு எதிர்வழக்குரையின் சாராம்சம்:**

வாதியின் தாவா பொய், மோசடி, சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும், செல்லத்தக்கதல்ல. இந்த விபரப்பத்திரிக்கையில் இந்த பிரதிவாதிகளால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர மற்றவைகளை வாதியே நிரூபிக்க வேண்டியது. இந்த தாவாச் சொத்துக்களம், ஷை சொத்துக்களும் ஆதியில் ஒரு நாச்சிமுத்துகவுண்டர் என்பவரின் பொது குடும்ப சொத்துக்களாகும். மேற்படி நாச்சிமுத்து கவுண்டர் மறைந்த பின்னர் மனைவியும், மக்களும் 1971 ம் ஆண்டே பாகம் பிரித்து கொண்டனர் 17.03.1971 ம் தேதிய பாக பத்திரப்படி தாவா சொத்துக்கள் முழுவதையும் நாச்சிமுத்துகவுண்டர் மகள்கள், பானுமதி, மனோண்மணி, ஆகியோர்களுக்கு முழுமையாக ஒதுக்கப்பட்ட சொத்துக்களாகும். அவ்வாறு பானுமதி, மனோண்மணி ஆகியோர்களுக்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களை இந்த பிரதிவாதி கடந்த 24.05.1999 ம் தேதியிட்ட கிரைபத்திரப்படி தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார். தாவாச் சொத்தில் கண்டுள்ள கிணர் இந்த பிரதிவாதி கிரையத்திற்கு வாங்கும் வரை உபயோகிக்கப்படாமல் ஒரு பாழடைந்த கிணர். தாவா சொத்தில் கண்டுள்ள கிணர் இந்த பிரதிவாதி கிரையத்திற்கு வாங்கிய பின்னர்தான் தாவா சொத்தில் கூறப்பட்டுள்ள கிணற்றை தூர்வாரி, பராமரிப்பு செய்து அதற்கு தமிழ்நாடு மின்சார வாரியம் மூலமாக மின் இணைப்பு எண். 964 பெற்று அதில் ஒரு. 7.5 எச்.பி மின்சார மோட்டார் பொருத்தி நீர் இறைத்து தாவா சொத்துக்களையும் இதர சொத்துக்களையும் விவசாயம் செய்து

வருகிறார். தாவாச் சொத்தில் உள்ள கிணறு பிரதிவாதி கிரையம் பெறும் வரை உபயோகிக் லாயக்கற்ற ஒரு பாழடைந்த கிணறாகும். ஆகவே தாவா கிணற்றை தாவாவில் சொல்லியுள்ள முன் உரிமையாளர்களான நாச்சிமுத்துக்கவுண்டர், மணி நாயகம் ஆகியோர்கள் எந்த காலக்கட்டத்திலும் தாவாசொத்துக்களை அனுபவித்தது கிடையாது. பராமரிப்பு செய்யவும் கிடையாது. தற்போது இந்த பொய் தாவாவிற்காக பொய்யான சங்கதிகளை கூறியுள்ளார். தாவாச் சொத்தை 1971 ம் ஆண்டில் இருந்து பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர்களான பானுமதி, மனோண்மணி ஆகியோர்கள்தான் முழு உரிமையுடன் எந்தவிதமான இடையூறுமின்றி அனுபவித்து வந்தார்கள். இந்த பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியில் இருந்து எவ்வித இடையூறுமின்றி தாவா சொத்தை அனுபவித்து வருகிறார். வாதிக்கு கிரையம் கொடுத்த மணி, நாயகம் ஆகியோருக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து கிரையத்திற்கு கொடுப்பதற்கு எவ்வித உரிமையும் கிடையாது. தாவாவில் சொல்லியுள்ள 21.11.2008 ம் தேதியிட்ட கிரைய பத்திரம் இந்த பிரதிவாதியின் உரிமைகளை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது. 21.11.2008 ம் தேதிய கிரைய பத்திரத்தை இந்த பிரதிவாதி முழுமையாக நிராகரிக்கிறார். இந்த வாதிக்கு கிரையம் கொடுத்தவர்களுக்கே இந்த தாவா சொத்து எவ்வகையிலும் பாத்தியப்பட்டதல்ல. அவர்கள் இந்த தாவா சொத்துக்களை எந்த காலத்திலும் அனுபவித்தது கிடையாது. அதேபோல் இந்த வாதிக்கு இந்த தாவா சொத்துக்கள் மீது உரிமை கோருவதற்கு சட்டப்படியும், நியாயப்படியும், எந்த அருகதையும் கிடையாது. தாவாச் சொத்துக்கள் முழுவதையும் தற்போது பிரதிவாதியும் 1971 ம் ஆண்டு முதல் அவரின் முன் உரிமையாளர்களும் 1971 ஆண்டுக்கு முன்பே பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தரின் முன்னோர்கள் தொடர்ந்து எவ்வித இடையூறும் இன்றி அனுபவித்து வருகிறார்கள். இந்த தாவா தாக்கல் செய்யும் வரை இந்த வாதியோ அவரின் முன் உரிமையாளர்களோ அதற்கு முன்னிருந்த உரிமையாளர்களோ தாவாச் சொத்துக்களில் எவ்வித உரிமையும்

கோரியது கிடையாது. கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக இந்த பிரதிவாதியின் முன் உரிமையாளர்களும் தொடர்ந்து இந்த பிரதிவாதியும் எவ்வித இடையூறும் இன்றி கேள்வியும் இன்றி ஊர் உலகறிய தாவா சொத்துக்களை அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்துக்களுக்கு மின் இணைப்பு பெற்று பொருத்தும் போது இந்த பிரதிவாதியின் முன் உரிமையாளர் அருகிலேயேதான் இருந்தனர். அவர்கள் எவ்வித ஆட்சேபணையும் தெரிவிக்கவும் இல்லை. இந்த வாதி 50,60 ஆண்டுகளுக்கு பின்னர் இப்போதுதான் இந்த தாவாவின் மூலம் புதிதாக உரிரி கோருகிறார். இந்த தாவாச் சொத்துக்களில் உரிமை கோருவதற்கு வாதிக்கு எவ்வித சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் எந்த அருகதையும் கிடையாது. இந்த பிரதிவாதிக்கு பிரதிவாதியின் முன் உரிமையாளர்களின் 17.03.1971 ம் தேதியிட்ட பாக பத்திரப்படியும் இந்த பிரதிவாதியின் 25.04.1999 தேதிய கிரைய பத்திரப்படியும் இந்த பிரதிவாதியின் தொடர் அனுபவ சுவாதீனத்தின் பேரிலும் (Law of adverse possession) படியும்,, இந்த தாவா சொத்துக்கள் முழுவதும் இந்த பிரதிவாதிக்கு மட்டும் தான் சர்வ சுதந்திரமாக பாத்தியப்பட்டதாகும். இந்த பிரதிவாதி ஒரு வயதான பெண்மணி என்பதால் பொய்யா ன வழக்குகள் மூலம் அலைக்கழித்து அவரை தொந்தரவு செய்து இந்த பிரதிவாதியின் சொத்துக்களை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த பொய் தாவாவை தாக்கல் செய்துள்ளார். இந்த பிரதிவாதிக்கு பத்திரங்கள் படியும் தொடர் அனுபவ சுவாதீனத்தின் படியும் (Law of adverse possession) படியும் இந்த தாவா சொத்துக்கள் முழுவதும் இந்த பிரதிவாதிக்கு முழுமையாக பாத்தியப்பட்டவையாகும். ஆகையால் இந்த பொய் வழக்கு சமூகம் நீதிபதி அவர்களால் முழுமையாக தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும். தாவா நிலுவையில் உள்ள நிலையில் தாவா சொத்துக்களை 1 ம் பிரதிவாதி இந்த 2 ம் பிரதிவாதிக்கு 16.07.2012 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் பத்திரப்படி தாவாச் சொத்துக்களை பாத்தியப்படுத்தி சொத்துக்களின் சுவாதீனமும் கொடுத்துவிட்டார். இந்த

2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதியின் மகள் அல்ல. உண்மையில் மகன் வழி பேத்தியாவார். மேற்படி செட்டில்மெண்ட் படி 1ம் பிரதிவாதிக்கு இருந்த முழு உரிமைப்படியும், அனுபவப்படியும் இந்த தாவாச் சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். இந்த வாதிக்கும், தாவாச் சொத்திற்கும் எந்த உரிமையும் கிடையாது. 1ம் பிரதிவாதியின் முழு எதிர்வாதத்தையும் 2ம் பிரதிவாதி அபாட்ச் செய்து கொள்கிறார். ஆகவே நீதிபதி அவர்கள் கிருபை செய்து, இந்த பிரதிவாதி சமூகம் நீதிமன்றத்தில் தாழ்மையுடன் பிரார்த்தித்துக் கொள்வது என்னவென்றால், வாதியின் இந்த பொய் தாவாவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தனக்கு நீதி வழங்க வேண்டுமாய் தாழ்மையுடன் பிரார்த்திக்கிறார்.

4. அசல் வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்கள்:

1. தாவாச் சொத்துக்களை வாதிக்கு கிரையம் எழுதிக்கொடுக்க அதனை விற்ற நபர்களுக்கு உரிமையுள்ளதா?

2. எதிர் உடமை அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு சொத்தில் உரிமை எதுவும் ஏற்பட்டுள்ளதா?

3. வாதி கோரியபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பெற தகுதி உடையவரா?

4. இதர பரிகாரங்கள் என்ன ?

2ம் பிரதிவாதி வழக்கில் சேர்க்கப்பட்ட பின்னர் கடந்த 05.12.2012ம் தேதியில் கீழ்க்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டுள்ளது.

1. கடந்த 16.07.2012ம் தேதியில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களை பொறுத்து எழுதிய செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதா?

5.கீழமை நீதிமன்றத்தில் வாதிகள் தரப்பில் வா.சா.1,2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.1 மற்றும் 2 சாட்சிகள் விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 மற்றும் 6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பையும் கேட்டறிந்து வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்த கீழமை நீதிமன்றம் அசல் வழக்கை அனுமதி செய்து தீர்ப்பாணை பிறப்பித்ததை எதிர்த்து வாதி இம்மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார்.

**<u>மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:</u>**

6. கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தீர்ப்பாணையும், சட்டத்திற்கும், சாட்சியத்திற்கும் விரோதமாக உள்ளது. கீழமை நீதிமன்றம் வழக்கை சரியாக பரிசீலிக்காமல், தீர்ப்பும், தீர்ப்பாணையும் வழங்கியுள்ளது. கீழமை நீதிமன்றம் எழுவினா 1,2 யை சரியாக பரிசீலிக்க தவறிவிட்டது. கீழமை நீதிமன்றம் சரியாக பரிசீலிக்காமல் பிரதிவாதி/வாதி முன்னதாகவே தாவாக் கிணற்றை அனுபவத்து வந்தார்கள் என்பதை பரிசீலிக்கவில்லை. கீழமை நீதிமன்றம் தீர்ப்பில் மேற்கோள் காட்டப்பட்ட தீர்ப்புகள் சரியாக இல்லை. தீர்ப்பு முழுவதும் சுட்டிக்காட்டப்பட்ட மேற்கோள்கள் பிரதிவாதி/ வாதிக்கு ஆதரவாகவே உள்ளது. கீழமை நீதிமன்றம் பிரதிவாதி/வாதி மற்றும் மேல்முறையீட்டாளர்/வாதி தாக்கல் செய்த ஆவணங்களை சரியாக பரிசீலிக்கவில்லை. கீழமை நீதிமன்றம் இருதரப்பு சாட்சி சான்றாவணங்களை தவறாக தீர்மானித்துள்ளது. எனவே கீழமை நீதிமன்றத்தின் தீர்ப்பும் தீர்ப்பாணையையும் ரத்து செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்க வேண்டும்.

7. <u>இம்மேல்முறையீட்டில் தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,</u>

1. தாவாச் சொத்துக்களில் மேல்முறையீட்டாளருக்கு எதிரிடை அனுபவம் (Adverse Possesion) ஏற்பட்டுள்ளதா ?

2. கீழமை நீதிமன்றம் தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்து இம்மேல்முறையீடு அனுமதிக்கதக்கதா?

என்பதாகும்.

8. **<u>பிரச்சனை எண் 1,2</u>**

மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த தனது வாதத்தில் மேல்முறையீட்டாளர் அசல் வழக்கில் பிரதிவாதி என்றும், அசல் வழக்கு எதிர்மனுதாரர் /வாதியால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றும், தாவாச் சொத்தாக ஜல்லிப்பட்டி கிராம க.ச. 37 ஏ 1, ஏ 2 காலையில் உள்ள 20 செண்ட் நிலமும் மேற்படி நிலத்தில் உள்ள

கிணற்றில் சரிபாதி பங்கிற்கும் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றும், வாதியானவர் 21.11.2008 தேதிய கிரைய பத்திரப்படி தாவாச் சொத்தில் உரிமைகோரியுள்ளார் என்றும், ஆனால், வாதியின் கிரையதாரர்கள் தாவாச் சொத்தில் அனுபவத்தில் இருந்தார்கள் என்பதற்கு எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றும் தாவாச் சொத்து பிரதிவாதியின் கிரையத்தாரர்களான பானுமதி, மனோண்மணி ஆகியோருக்கு 17.03.1971 தேதிய பாகப்பிரிவினைப்படி பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவித்து வந்து 24.05.1991 தேதியில் மேல்முறையீட்டாளருக்கு கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றும், மேற்படி கிணற்றை மேல்முறையீட்டாளர் சுத்தப்படுத்தி மின் இணைப்பு பெற்று தற்போது மேல்முறையீட்டாளர் அனுபவித்து வருகிறார் என்றும், மேல்முறையீட்டாளரின் கிரையத்தாரர்களின் பெயரில் உள்ள பட்டா, பாஸ்புத்தகங்கள் பி.வா.சா.ஆ.1,2 ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி, பட்டா பாஸ்புத்தகங்கள் 1996 ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது என்றும், வாதியோ, அவரது முன் கிரையத்தாரர்களோ தாவா கிணற்றை பயன்படுத்தியதில்லை என்றும், எனவே, தாவாச் சொத்து மேல்முறையீட்டாளர் எதிரிடை அனுபவப்படி பாத்தியப்பட்டது என்பது நிருபிக்கப்பட்டுள்ளது என்றும், ஆனால், கீழமை நீதிமன்றம் மேல்முறையீட்டாளர் கிரையம் பெற்ற 1999 ம் ஆண்டிலிருந்து வழக்கு தாக்கல் செய்துள்ள நாள் வரை கணக்கிட்டு 12 வருடம் முடியவில்லை என்பதால் எதிரிடை அனுபவம் ஏற்படவில்லை என்று தவறாக தீர்மானித்துள்ளது என்றும், மேல்முறையீட்டாளர் கிரையத்தாரர்கள் பெயரில் உள்ள பட்டா, பாஸ்புத்தகம் 1996 ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள நிலையில் அசல் வழக்கு தாக்கல் செய்த 2009 ம் ஆண்டில் 12 வருடம் முடிவடைந்துள்ளது என்றும், எனவே, இம்மேல்முறையீடு அனுமதிக்கவேண்டும், கீழமை நீதிமன்ற தீர்ப்பும், தீர்ப்பாணையும் ரத்து செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

9. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்குரைஞர் தனது வாதத்தில் தாவாச் சொத்து எதிர்மனுதாரர்/வாதியின் கிரையத்தாரர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும், எதிர்மனுதாரர்/வாதியானவர் தாவாச் சொத்துக்களை 21.12.2008 தேதியில் கிரையம் பெற்று அனுபவத்து வருகிறார் என்றும், ஆனால், மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி தாவாச் சொத்திலும், கிணற்றிலும் வாதிக்கு உரிமையில்லை என்று மறுத்ததால் விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது என்றும், பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பிரதிவாதியின் கிரையத்தாரர்களான பானுமதி, மனோண்மணிக்கு தாவாச் சொத்தில் எவ்வித உரிமையும் இல்லையென்றும், மேற்படி பாகப்பிரிவினைப் பத்திரத்தில் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி கிரையத்தாரர்களுக்கு க.ச. 33 ஏ நெ. காலையில் உள்ள கிணற்றில் மட்டுமே அவர்களுக்கு பங்கு அளிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே, தாவாச் சொத்து குறித்து மனோன்மணி, பானுமதி ஆகியோருக்கு மேல்முறையீ ட்டாளர்/பிரதிவாதி க்கு கிரையம் எழுதி கொடுக்க எவ்வித உரிமையும் இல்லை என்றும் மேலும், மனோன்மணி, பானுமதி ஆகியோர் பெயரில் உள்ள பட்டா, பாஸ்புத்தகங்களில் தாவாச் சொத்தில் 1/2 பங்கு உள்ளதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், மேலும், மேல்முறையீட்டாளர்/பிரதிவாதியானவர் கிரைய ஆவணங்களின்படியே தாவாச் சொத்தில் தான் உரிமை கோருவதாக கூறியுள்ளார் என்றும், உரிமை ஆவணம் மூலம் உரிமை கோருவது எதிரிடை அனுபவம் மூலம் உரிமை கோருவதும் ஒன்றுக்கொன்று முரண்னாது என்றும், தாவாச் சொத்தில் வாதியின் உரிமையை ஒப்புக்கொண்டே எதிரிடை அனுபவம் கோரமுடியும் என்றும், தாவாச் சொத்தில் வாதியின் உரிமையை ஒப்புக்கொண்டதாகவோ, அவரது உரிமையை மறுத்து அனுபவித்து வந்ததாகவோ எவ்வித சாட்சி சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தவில்லை என்றும், எனவே, தான் கீழமை நீதிமன்றம் தாவாச் சொத்தில் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி எதிரிடை

அனுபவத்தை நிரூபிக்கவில்லை என்று கூறி வாதியின் வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்துள்ளது என்றும், எனவே, மேற்படி தீர்ப்பும், தீர்ப்பாணையும் தலையிட வேண்டிய அவசியம் இல்லை என்றும், மேல்முறையீடு தள்ளுபடி செய்யவேண்டுமென்று வாதிட்டார்.

10. இருதரப்பு வாதம் மற்றும் கீழமை நீதிமன்ற வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இம்மேல்முறையீடு முழுவதும் வசதி கருதி மேல்முறையீட்டாளர் பிரதிவாதி என்றும், எதிர்மேல்முறையீட்டாளர் வாதி என்றும், அழைக்கப்படுவார்கள்,

11. அசல் வழக்கு வாதியால் ஜல்லிப்பட்டி கிராம க.ச. 37/ஏ 1,ஏ 2 கிணற்றிடம் பு.ஏ. 0.20 ஏக்கரிலும், மேற்படி இடத்தில் உள்ள கிணற்றில் சரிபாதி பங்கு கோரியும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வழக்கின்படி தாவாச் சொத்து ஆதியில் நாச்சிமுத்து என்பவருக்கு 25.02.1974 தேதிய கிரையப்படி பாத்தியப்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. மேற்படி கிரைய பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ 1 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி கிரையப் பத்திரத்தின் சொத்து விபரத்தில் க.ச. 37/ஏ 1 காலையில் உள்ள கிணற்றில் பொதுவில் சரிபாதி பாகம் கிரையம் கொடுத்துள்ளது தெரியவருகிறது. மேற்படி நாச்சிமுத்துகவுண்டர் தனது மகளான மணி என்பவருக்கு 27.03.1997 தேதியில் க.ச. 37/ஏ 1,ஏ 2 காலையில் உள்ள கிணறு மற்றும் கிணற்றடியில் தனக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கான 10 செண்ட்டில் பாதியையும், கிண்ற்றில் 1/4 பங்கையும் செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளது வா.சா.ஆ.2 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. அதே தேதியில் நாச்சிமுத்துகவுண்டர் மற்றொரு மகளான நாயகம் என்பவருக்கு 27.03.1997 தேதியில் க.ச. 37/ஏ 1,ஏ 2 காலையில் உள்ள கிணறு மற்றும் கிணற்றடியில் தனக்கு பாத்தியப்பட்ட சரிபாதி பங்கான 10 செண்ட்டில் பாதியையும், கிண்ற்றில் 1/4 பங்கையும் செட்டில்மெண்ட் செய்து வைத்துள்ளது வா.சா.ஆ.3 ஆவணத்தின் மூலம்

தெரியவருகிறது. மேற்படி நாச்சிமுத்துகவுண்டர் மகள்களான நாயகம், மணி ஆகியோரிடமிருந்து வாதியானவர் தாவாச் சொத்துக்களை 21.11.2008 தேதியில் கிரையம் பெற்றுள்ளார் என்பது வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் தெரியவருகிறது. எனவே, தாவாச் சொத்தில் வாதியின் உரிமை வாதி தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

12. பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்து தனக்கு எதிரிடை அனுபவம் மூலம் பாத்தியப்பட்டது என்று கூறியுள்ள நிலையில் அதை நிருபிக்க வேண்டிய பொறுப்பு பிரதிவாதியை சார்ந்ததாகும். இதுகுறித்து நமது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2007 3 CTC 691 என்ற தீர்முடிவில் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

N. Durai Vs Madhu and Others

7. The change in the position in law as regards the burden of proof as was obtaining in the Limitation Act 1908 vis-a-vis Limitation Act, 1963 is evident. Whereas in terms of Article 142 and 144 of the old Limitation Act, the Plaintiff was bound to prove his title as also possession within twelve years proceding the date of institution of the suit, under the Limitation act 1963 once the plaintiff proves his title, the burden shifts to the defendant to establish that he has perfected his title by adverse possession.

மேலும், இது குறித்து நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2014 5 MLJ 705 என்ற தீர்முடிவில் பத்தி 12 மற்றும் 14 ல் கீழ்க்கண்டவாறு சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

G.Radhakrishnan and Another ...Appellants/Defendants

Vs

Kanna Pillai and Others ... Respondent

12(1) The burden of proof lies on the party who claims adverse possession. The defendants had to plead and prove tht the possession of the first defendant was nee vi, nee clam, ne precario, i.e., peaceful. Open and continuous. This has been so held in the case reported in Parsinnin V.Sukhi, (Supra) (1993 4 SCC 375)

மேற்படி தீர்முடிவை பார்கையில் தாவா சொத்துக்கள் உடமை நீக்கம் மூலம் எதிரிடை அனுபவத்தின் அடிப்படையில் தனக்கு பாத்தியப்பட்டது என்று கூறுகின்ற நபரே, அதை நிரூபிக்க வேண்டும் என்றும், கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வழக்கில் பிரதிவாதி தாவாச் சொத்தில் தனது எதிரிடை அனுபவத்தை நி ருபித்துள்ளாரா என்று காணவேண்டியுள்ளது.

13. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் தாவாச் சொத்தில் உள்ள கிணறு பிரதிவாதி கிரையம் பெறும் வரை உபயோகிக்க லயாக்கற்ற பாழடைந்த கிணறாகும். தாவா கிணற்றை தாவாவில் சொல்லியுள்ள வாதியின் முன்னுரிமையாளர்களான நாச்சிமுத்துகவுண்டர், மணி, நாயகம், ஆகியோர் எந்த காலக்கட்டதிலும் அனுபவிக்கவில்லையென்றும், தாவாச் சொத்தை 1971 ம் ஆண்டிலிருந்து பிரதிவாதியின் முன் பாத்தியஸ்தர்களான பானுமதி, மனோண்மணி ஆகியோர்கள் முழு உரிமையுடன் எவ்வித இடையூறின்றி அனுபவித்து வந்ததாகவும் பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து எவ்வித இடையூறின்றி அனுபவித்து வருகிறார் என்றும், கூறப்பட்டுள்ளது. அதேபோன்று எதிர்வழக்குரையில் இந்த பிரதிவாதிக்கு பிரதிவாதியின் முன் உரிமையாளர்களின் 17.03.1971 ம் தேதியிட்ட பாகப் பத்திரப்படியும் இந்த பிரதிவாதியின் 25.04.1999 ம் தேதி கிரைய பத்திரப்படியும் பிரதிவாதியின் தொடர் அனுபவ சுவாதீனத்தின் பேரிலும் ( Law of adverse Possession) படியும் தாவாச் சொத்துக்கள் முழுவதும் பிரதிவாதிக்கு மட்டும்தான் சர்வசுதந்திரமாக பாத்தியப்பட்டதாகும் என்று கூறப்பட்டுள்ளது.

மேற்படி எதிர்வழக்குரையை பார்க்கையில் பிரதிவாதியானவர் தாவாச் சொத்தில் தனது உரிமையை உரிமை ஆவணம் ( Title deed) மூலமும் எதிரிடை அனுபவம் மூலமும் கோரியுள்ளார். மேற்படி இரண்டு கோருரிமையும் ஒன்றுக்கொன்று முரண்னானதாகும். எதிரிடை அனுபவத்தை கோரவேண்டுமானால், வாதியின் உரிமையை பிரதிவாதி ஒப்புக்கொள்ளவேண்டும். இதுகுறித்து நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2009 5 CTC 558 என்ற தீர்முடிவில் கீழ்கண்டவாறு சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

S. Ganesan /Vs / Bharathirajan

9. The plaintiff having taken the plea of ownership based upon title cannot claim adverse possession since under the doctrine of adverse possession one has to accept the title of the owner. It has been held in M. Ganesa Reddiar and Others Vs C. Krishnasamy Raju 2008 (5) MLJ 144. that in such a case the plea of adverse possession cannot allowed to be raised. Hence this Court finds that contention of the plaintiff regarding adverse possession cannot be accepted.

14. மேற்படி தீர்முடிவை பார்க்கையில், உரிமை ஆவணத்தின் மூலமும் எதிரிடை அனுபவம் மூலமும் ஒரு நபர் உரிமை கொண்டாட முடியாது என்பது தெரியவருகிறது. இருப்பினும், அவ்வாறு கோர பிரதிவாதிக்கு உரிமையிருப்பதாக வைத்துக்கொண்டாலும், தாவாச் சொத்தில் பிரதிவாதியானவர் தனது உரிமையை உரிமை ஆவணம் மூலம் நிரூபித்துள்ளாரா என்று காணவேண்டியுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்தில் தனது உரிமைக்கு 17.03.1971 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தை சார்ந்துள்ளார். 17.03.1971 தேதிய பாகப்பிரிவினை பத்திரத்தின் பதிவு நகல் வா.சா.ஆ.5 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில் பிரதிவாதியின் கிரையத்தாரர்களான மனோண்மனி, பானுமதி

ஆகியோருக்கு இ அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது மேற்படி ஆவணத்தின் சொத்து விவரத்தில்

> “ மேற்படி 33 ஏ. நெ. காலையில் உள்ள 1 துளை சிகஸ்து கிணர் 1ல் சரிபாதியும் களம் வகையறாவும் மேற்படி 33 ஏ நெ. காலையில் உள்ள 5 அங்கண சாளை அதை சேர்ந்த தாழ்வாரம் இவைகளில் மேல்புறம் சரிபாதி சாலையும் தாழ்வாரமும் மேற்படி கட்டிடங்களை சேர்ந்த கதவு நிலவு கட்டுகோப்பு வகையறாவும் 37/ஏ 1 நெ. காலையில் உள்ள கிணற்றடிக்கு ஒருவர் நடந்துகொள்ளும் தடத்தின் வழியாக மற்றவரும் நடந்துகொள்ளும் பாத்தியமும்".

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்படி சொத்து விவரத்தில் பிரதிவாதியின் கிரையதாரர்களான மனோண்மணி, பானுமதி ஆகியோருக்கு தாவாச் சொத்தான 37/ஏ நிலத்தில் உள்ள கிணற்றில் உரிமை எதுவும் வழங்கப்படவில்லை. மாறாக 33 ஏ காலையில் உள்ள கிணற்றில் மட்டுமே உரிமை வழங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் தாவாச் சொத்து பிரதிவாதியின் கிரையத்தாரர்களுக்கு எவ்வித உரிமையும் இல்லாத நிலையில் பிரதிவாதிக்கு கிரையம் எழுதிக் கொடுத்துள்ளது ஏற்புடையதல்ல. எனவே, பிரதிவாதிக்கு கிரைய ஆவணத்தின் மூலம் எவ்வித உரிமையும் ஏற்படாது.

15. இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்தை பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்கள் 1971ம் ஆண்டிலிருந்து முழு உரிமையுடன் எவ்விதமான இடையூறுமின்றி அனுபவித்து வந்து பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து எவ்வித இடையூறின்றி அனுபவித்து வருவதால் தாவாச் சொத்தில் எதிரிடை அனுபவம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், எதிரிடை அனுபவத்தை நிரூப்பிப்பது குறித்த தீர்முடிவுகளை காண்பது அவசியம் என்று

கருதுகிறேன். எதிரிடை அனுபவத்தை நிரூபிப்பது குறித்து மாண்புமிகு உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2004 10 SCC 779 என்ற தீர்முடிவில் கீழ்கண்டவாறு சுட்டிகாட்டப்பட்டுள்ளது.

Karnataka Board of Wakf Vs Government of India and others

“ Therefore, a person who claims adverse possession should show:

(a) on what date he came into possession,

(b) what was the nature of his possession,

(c) whether the factum of possession was known to the other party,

(d) how long his possession has continued, and

(e) his possession was open and undisturbed”

மேற்படி தீர்முடிவை பார்கையில் எதிரிடை அனுபவத்தை நிரூபிக்க வேண்டுமானால் எந்த தேதியில் சொத்தின் சுவாதீனத்திற்கு வந்தார், அவரது சுவாதீனத்தின் தன்மை என்ன, மேற்படி சுவாதீனம் மறுதரப்பினருக்கு தெரியுமா, எத்தனை நாட்கள் மேற்படி சுவாதீனம் தொடர்ந்தது, மேற்படி சுவாதீனம் வெளிப்படையாக இடையூறின்றி இருந்ததா என்று நிரூபிக்க வேண்டும்.

16. மேலும், ஏற்கனவே சுட்டிகாட்டப்பட்டுள்ள நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2009 5 CTC 558 என்ற தீர்முடிவில் கீழ்க்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

S. Ganesan /Vs / Bharathirajan

10, It is further seen that mere possession for any length of time would not lead to adverse possession. The duration or length of possession is not a factor for deciding possession.

மேலும், நமது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட 2011 6 CTC 21 என்ற தீர்முடிவில் கீழ்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

K.Gopalan (died) & Others Vs. Muthulaxshmi

21. Therefore, as per the law laid down by the Hon'ble Supreme Court and our High Court that long possession will not become adverse possession and a duty is cast upon the person, who claims adverse possession to prove that his possession became adverse to the knowledge of the true owner and the person was enjoying the property with the knowledge that he was not the owner and others were the owners and he was enjoying the property to the knowledge of such other person.

17. மேற்படி தீர்முடிவுகளை பார்க்கையில் சொத்தில் நீண்ட நாட்களாக அனுபவத்தில் இருப்பது மட்டுமே எதிரிடை அனுபவத்தை நிரூபிக்காது என்பதும், சொத்தின் உரிமையாளரின் உரிமையை மறுத்து அவருக்கு தெரியவே தொடர்ந்து எவ்வித இடையூறின்றி 12 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வருவதை நிரூபிக்க வேண்டுமென்பது தெரியவருகிறது.

18.இவ்வழக்கில் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் பிரதிவாதியின் கிரையதாரர்களான மனோண்மணி, பானுமதி ஆகியோர் 1971 ம் ஆண்டிலிருந்து முழு உரிமையுடன் எவ்வித இடையூறின்றி அனுபவித்து வந்தார்கள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், பிரதிவாதியின் கிரையதாரர்கள் நாச்சிமுத்துகவுண்டரின் உரிமையையோ, அவருடைய மகள்களான மணி, நாயகம், ஆகியோருடைய உரிமையை தாவாச் சொத்தில் மறுத்து அனுபவித்து வந்தார்கள் என்பது குறித்து எவ்வித கூற்றும் கூறப்படவில்லை. மேலும், பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டபோது வாதி தரப்பில் குறுக்குவிசாரணை செய்தபொழுது

" எனது எதிர்வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் கிணறு எங்களால் கிரையம் பெறப்படும் வரை உபயோகப்படாமல் பாழடைந்த கிணறாக இருந்தது என்று நாங்கள் கிரையம் பெற்ற பின்னர் கிணற்றை தூர் வாரி பராமரித்து, அனுபவித்து வருவதாக, கூறியுள்ளேன் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் பெறும் வரை மனோண்மணி பானுமதி ஆகியோரால் கிணறு பயன்படுத்தப்படாமல் இருந்தது என்றால் சரிதான்".

"நாச்சிமுத்துகவுண்டர் அவருடைய மகள் ஆகியோர் உடைய முன் உரிமையை நாங்கள் ஒத்துக் கொள்ளவில்லை. பானுமதி, மனோன்மணி ஆகியோர் நாச்சிமுத்து வகையராக்குரிய உரிமையை மறுத்து அனுபவம் செய்து வந்த அடிப்படையில் அவர்களுக்கு உரிமை ஏற்பட்டு அதன் அடிப்படையில் உரிமையை நாங்கள் கிரையம் பெற்றுள்ளதாக நான் வழக்காடவில்லை. மனோண்மணி, பானுமதி ஆகியோர் 1971 முதல் தாவா கிணற்றை அனுபவித்து வந்ததாக கூறுவது பொறுத்து எங்களுக்கு நேரடியாக தெரியாது அவர்கள் கூறியது தான். ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை".

என்று சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சியத்தை பார்க்கையில் பிரதிவாதியின் கிரையத்தாரர்கள் வாதியின் கிரையத்தாரர்களின் உரிமையை மறுத்து அனுபவித்து வந்ததற்கு எவ்வித ஆவணமும் இல்லையென்று கூறியுள்ளார். மேலும், பிரதிவாதியின் முன்பாத்தியஸ்தர்கள் வாதியின் கிரையத்தாரர்களின் உரிமையை மறுத்து அனுபவித்து வந்தார்கள் என்பதை அவர்களை சாட்சியாக விசாரித்து பிரதிவாதி நிரூபிக்கவில்லை. எனவே, பி.வா.சா.ஆ.1,2 பட்டா, பாஸ்புத்தகங்கள் பிரதிவாதியின் கிரையத்தாரர்களின் பெயரில் உள்ளதாலேயே மேற்படி தாவாச் சொத்து அவர்களால் எதிரிடை அனுபவமாக அனுபவிக்கப்பட்டது என்பதாக கருதப்படுகிறது. எனவே,

பிரதிவாதி தரப்பில் தாவாச் சொத்து எதிரிடை அனுபவம் மூலம் பாத்தியப்பட்டது என்பது நிரூபிக்கப்படவில்லையென்று கருதுகிறேன். தாவாச் சொத்தில் பிரதிவாதியின் எதிரிடை அனுபவம் நிரூபிக்கப்படாத நிலையில் தாவா சொத்துக்களில் வாதி கோரிய விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதாகும். கீழமை நீதிமன்றம் இருதரப்பினர்களின் வாதுரைகள் மற்றும் சாட்சி சான்றாவணங்களை பரிசீலனை செய்து சரியாகவே தீர்மானித்து வாதிக்கு ஆதரவாக தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பித்துள்ளது. எனவே, மேற்படி முடிவில் தலையிட வேண்டிய அவசியம் எதுவுமில்லை என்று கருதுகிறேன். எனவே, இம்மேல்முறையீடு தள்ளுபடிக்கு உகந்தது என்று கருதுகிறேன்.

முடிவாக, இம்மேல்முறையீடு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரி பார்க்கப்பட்டு, 2018 ம் ஆண்டு ஜுன் மாதம் 14-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

சார்பு நீதிபதி,
உடுமலைப்பேட்டை